


**22. 03. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நீடித்த எதிர்காலத்திற்கு தண்ணீர் சேமிப்பின் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. புதுச்சேரி யூனியன் பிரதேசம், கேரளம், அஸ்ஸாம் மாநிலங்களில் வரும் 9-ம் தேதி நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்பு மனுதாக்கல் நாளை முடிவடைகிறது.

3. பி. ஜே. பி-யின் தேர்தல் அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என அக்கட்சியின் தமிழக தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் திமுக கூட்டணி மற்றும் தொகுதி பங்கீடு விரைவில் இறுதி செய்யப்படும் என அக்கட்சி அறிவித்துள்ளது.

5. இந்தியன் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியின் இறுதிப்போட்டியில் இன்று அபய்சிங் - வீர் சோட்ராணி களமிறங்குகின்றனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

உலக தண்ணீர் தினம்

நாட்டு மக்கள் அனைவரும் தண்ணீர் சேமிப்பின் அவசியத்தை உணர்ந்து, ஒவ்வொரு துளி நீரையும் சேமிக்க வேண்டும் என பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

உலக தண்ணீர் தினம் இன்று கடைப்பிடிக்கப் படுவதை ஒட்டி அவர் வெளியிட்ட செய்தியில் புவியின் எதிர்காலம் மற்றும் நீடித்த வாழ்க்கைக்கு நீர் மேலாண்மை முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

மழைநீர் சேகாிப்பு குறித்த விழிப்புணர்வு, நீர் மேலாண்மைக்கான ஆக்கப்பூர்வமான திட்டங்களை செயல்படுத்துவோருக்கு பிரதமர் பாராட்டு தொிவித்துள்ளாா்.

இந்நாளையொட்டி தண்ணீரும் சமத்துவமும் என்ற கோட்பாட்டுடன் நீர் மேலாண்மை, நீர் சேமிப்பில் மகளிாின் பங்கு, நிலத்தடி நீர்மட்டத்தை அதிகாித்தல் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடுமுழுவதும் நடைபெறுகின்றன.

தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவதுடன் மழைநீர் சேகாிப்பை முறையாக மேற்கொள்ள வேண்டுமென திருச்சி மாவட்ட தண்ணீர் அமைப்பின் செயலாளர் பேராசிரியர் திரு. சதீஷ்குமாாா் தொிவித்துள்ளாா்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்திய அரசியல் வரலாற்றில் மிக நீண்ட காலம் பதவி வகிக்கும் பெருமையை பிரதமர் திரு. நரேந்திர மோடி பெற்றுள்ளாா்.

குஜராத் மாநில முதலமைச்சராகவும், நாட்டின் பிரதமராகவும் 25-வது தலைமைத்துவ ஆண்டில் இன்று திரு. நரேந்திரமோடி அடியெடுத்து வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தனித்துவமான வரலாற்று சிறப்பு மிக்க சாதனைகளால் பொது மற்றும் அரசியல் வாழ்க்கையின் மிகச்சிறந்த தலைவராகவும் திரு. நரேந்திரமோடி திகழ்கிறாா்.

இதற்குமுன் சிக்கிம் மாநில முதலமைச்சராக திரு. பவன்குமார் 8 ஆயிரத்து 930 நாட்கள் பதவி வகித்த நிலையில், திரு. நரேந்திரமோடி இன்றுடன் 8 ஆயிரத்து 931 நாட்களை நிறைவு செய்துள்ளாா்.

❖❖❖❖❖❖❖❖

L P G

நாடுமுழுவதும் வணிக பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டர்கள் விநியோகத்தை மேலும் 20 சதவிகிதம் அதிகாித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தொழிற்சாலை உணவகங்கள், பால் பொருட்கள் உற்பத்தி நிறுவனங்கள் உள்ளிட்டவற்றிற்கு முன்னுரிமை அடிப்படையில் கூடுதல் சிலிண்டர்கள் வழங்கப்படவுள்ளன.

இதனிடையே அமொ◌ிக்காவிலிருந்து L P G சரக்கு கப்பல் மற்றும் ரஷ்யாவிலிருந்து அக்வா டைடன் கச்சா எண்ணெய் சரக்கு கப்பல் மங்களுரு துறைமுகம் இன்று வந்தடைந்தது.

இதையடுத்து வரும் நாட்களில் எா◌ிவாயு சிலிண்டர் விநியோகம் இயல்பு நிலைக்கு திரும்பும் என எதி◌ா◌்பா◌ா◌்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

## மேற்காசி யா ஜி-7

மேற்காசியாவின் சில நாடுகளில் குடியிருப்புகள் மற்றும் முக்கிய கட்டுமானங்கள் மீது ஈரானின் தாக்குதலுக்கு ஜி-7 நாடுகள் கண்டனம் தொ◌ிவித்துள்ளன.

ஈரானின் இந்த நடவடிக்கை சர்வதேச பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவும், எனவே உடனடியாக தனது ராணுவ நடவடிக்கைகளை அந்நாடு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது

மேலும் உலகளாவிய தடையற்ற எா◌ிசக்தி விநியோகத்திற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

இதனிடையே ஹர்மோஸ் நீரிணை ஈரானின் எதி◌ா◌ிகளுக்கு மட்டுமே மூடப்பட்டுள்ளதாக சர்வதேச கடல்சா◌ா◌் அமைப்பிடம் ஈரான் தொ◌ிவித்துள்ளது.

இப்பகுதி வழியாக கடல் பயணம் மற்றும் கடல்சா◌ா◌் பாதுகாப்பிற்கு தேவையான நடவடிக்கைகளை பல்வேறு நாடுகளுடன் இணைந்து மேற்கொள்ள தயாராக உள்ளதாகவும் ஈரான் உறுதியளித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

## மன் கி பாத்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 132-வது முறையாக வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய தங்கள் கருத்துக்கள், வெற்றிப் பயணங்கள் குறித்து பொதுமக்கள், வரும் 27-ம் தேதிவரை

நமோ செயலி, mygov இணையதளம், 18 00 11 78 00 என்ற இலவச எண்ணில் தொிவிக்கலாம்.

❖❖❖❖❖❖❖❖

வேட்புமனு தாக்கல்

புதுச்சோி யூனியன் பிரதேசம் மற்றும் கேரளம், அஸ்ஸாம் மாநிலங்களில் வேட்பு மனுதாக்கல் நாளை முடிவடையும் நிலையில் வேட்பாளர்களை இறுதி செய்யும் பணிகளில் அரசியல் கட்சியினா் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனா்.

30 தொகுதிகளை கொண்ட புதுச்சோி யூனியன் பிரசேத்தில் போட்டியிடும் 9 வேட்பாளர்கள் அடங்கிய முதல் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

140 சட்டப்பேரவை தொகுதிகளைக் கொண்ட கேரளத்தில் இதுவரை 300-க்கும் மேற்பட்ட வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

126 சட்டப்பேரவை தொகுதிகளை கொண்ட அசாம் மாநிலத்தில் அரசியல் கட்சியினா் தேர்தல் நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனா்.

இம்மாநிலங்களில் ஒரே கட்டமாக அடுத்த மாதம் 9 -ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. வாக்குகள் வரும் மே மாதம் 4-ம் தேதி எண்ணப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖

தேர்தல் ஆணையம்

இதனிடையே சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் தமிழகம் கேரளம் அசாம், மேற்குவங்க மாநிலங்கள் மற்றும் புதுச்சோி யூனியன் பிரதேசத்தில் வாக்குச்சாவடி மையங்களில் அனைத்து அடிப்படை வசதிகளையும் உறுதி செய்யுமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்குப்பதிவு நடைபெறும் தினத்தன்று குடிநீர் வசதி, மேற்கூரையுடன் கூடிய காத்திருக்கும் இடங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்வுதளம் உள்ளிட்டவை ஏற்படுத்தப்பட வேண்டுமென தொிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

நயினா◌ா◌் நாகேந்திரன்

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான பி.ஜே.பியின் தேர்தல் அறிக்கை கூட்டணி பேச்சுவா◌ா◌்த்தை முடிந்த ஒருசில நாட்களில் வெளியிடப்படும் என கட்சியின் மாநிலத் தலைவர் திரு. நயினா◌ா◌் நாகேந்திரன் தொ◌ிவித்துள்ளா◌ா◌்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழகத்தின் வளர்ச்சிக்காக பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினா◌ா◌்.

4 வழிச்சாலை மேம்பாலங்கள், தூத்துக்குடி - திருச்சி விமான நிலை வி◌ா◌ிவாக்கம் உள்ளிட்டவற்றை சுட்டிக்காட்டிய அவர், திமுக ஆட்சியில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்வி குறியாக உள்ளதாக குற்றம் சாட்டினா◌ா◌்.

❖❖❖❖❖❖❖❖

கனிமொழி

தமிழகத்தில் திமுக கூட்டணி விரைவில் இறுதி செய்யப்படும் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தொ◌ிவித்துள்ளா◌ா◌்

தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகளில் கட்சித்தலைமை ஈடுபட்டுள்ளதாக கூறினா◌ா◌்.

மேற்காசிய நிலவரம் காரணமாக இந்தியாவில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை சா◌ிசெய்ய மத்திய அரசு உா◌ிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றா◌ா◌்.

❖❖❖❖❖❖❖❖

தேர்தல் தமிழகம்

தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்றிருந்தால் மட்டுமே வரும் சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிக்க முடியும் என தேர்தல் ஆணையம் தொ◌ிவித்துள்ளது.

எனவே பெயர் விடுபட்ட தகுதியுடைய வாக்காளர்கள் வரும் 26-ம் தேதிவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

இதனிடையே மாநிலத்தில் 100 சதவிகித வாக்களிப்பை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மாற்றுத்திறனாளிகள் 85 வயதிற்கு மேற்பட்ட முதியோா் வீட்டிலிருந்தே வாக்களிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தயாா் நிலையில் உள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. மோகனச்சந்திரன் தொிவித்துள்ளாா்.

.. வாய்ஸ் ..

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த தேர்தல்களில் குறைவான வாக்குப்பதிவு கண்டறியப்பட்ட பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு விழிப்புணர்வ நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி. மிருணாளினி தொிவித்துள்ளாா்.

கிருஷ்ணகிாி புதிய பேருந்து நிலையத்தில் மாவட்ட தேர்தல் அலவலர் திரு. தினேஷ்குமாா் தலைமையில் எனது இந்தியா ! எனது வாக்கு ! விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறாா்.

❖❖❖❖❖❖❖❖

இருவாி

தொடர்விடுமுறை காரணமாக உதகைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகாித்துள்ளது.

அரசு தாவரவியல் பூங்கா, படகு இல்லம், முதுமலை புலிகள் காப்பகம், கண்ணாடி மாளிகை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சுற்றுலா பயணிகள் இதமான காலநிலை மற்றும் இயற்கை அழகை கண்டு ரசித்து வருகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

பங்குனி உத்திரம்

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவில்

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் உள்ளிட்ட திருக்கோவிலில் பங்குனி உத்திர திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

மன்னார்குடி அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோவில் பங்குனி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான வெண்ணைத்தாழி உற்சவம் நாளை நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

ஸ்குவாஷ்

மும்பையில் நடைபெறும் இந்தியன் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இந்தியாவின் அபய்சிங் – சக வீரர் வீர் சோட்ராணியை இன்று இரவு எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் இரவு 7 மணிக்கு நடப்பு சாம்பியன் இந்தியாவின் அனஹத் சிங் இரண்டாம் நிலை வீரரான எகிப்தின் ஹனாவை எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

கால்பந்து

I.S.L. கால்பந்து போட்டிகளில் இன்றுமாலை 5 மணிக்கு சென்னையின் F.C – கோவா அணியையும்

இரவு ஏழரை மணிக்கு இண்டர்காஷி – பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖